தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041– ஐப்பசி 24

2010 நவம்பர் 10, புதன்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்றம்–தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்”

வகைப்படுத்தியும், சுவையாகவும் கருத்துகளைச் சொல்லும் வல்லமையுடையோர் சுட்டிக்காட்டும் பணியை, உலகத்தார் உடனடியாக நிறைவேற்ற முனைவார்கள்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள்.* வினா வரிசை எண் *11,* பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். அடுத்து, வினா வரிசை எண் *12,* மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

12—

குடிநீர்

***33516—திரு. தி. இராமசாமி:**

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2010 நவம்பர் 10

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியத்திற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடையை அளிக்கிறேன். ஆம். விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், வத்திராயிருப்பு ஒன்றியத்தைச் சேர்ந்த அனைத்து குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கும் வகையில் தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு ரூ.173 கோடி திட்ட மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தயாரிக்கப்பட்டு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம், வத்திராயிருப்பு பகுதி கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும் என்று நமது மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். அத்திட்டத்தினை எந்தத் தேதியில் தொடங்கவிருக்கிறார்கள் என்ற விவரத்தையும் அவர்களே சொல்வார்கள். ஆனால், எங்கள் விருதுநகர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடுமையான வறட்சியாக இருந்த மாவட்டம். குடிப்பதற்குக்கூட தண்ணீர் பற்றாக்குறை தொடர்ச்சியாக இருந்து வந்தது. எங்கள் மாவட்டத்திற்குப் பக்கத்தில் தேனி மாவட்டத்திற்குச் சென்றால் அங்கே முல்லை—பெரியாறு தண்ணீரைக் குடிக்கின்றார்கள்; இந்தப் பக்கம் நெல்லைக்குச் சென்றால் தாமிரபரணி தண்ணீரைக் குடிக்கின்றார்கள்; மதுரைக்குப் போனால் வைகை தண்ணீர்; அதையும் தாண்டி திருச்சிக்குச் சென்றால், காவிரி தண்ணீர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எத்தனை ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கின்றன என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். முதலில், கேள்விக்கு வாருங்கள்.

திரு. தி. இராமசாமி: எங்கள் மாவட்ட மக்களுக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் பற்றாக்குறை மட்டுமல்ல; கீழூற்றிலிருந்து தண்ணீர்

எடுத்தால் புளோரைடு அதிகமாகக் கலந்த தண்ணீராக இருக்கிறது. எனவே, நல்ல தண்ணீர் வேண்டுமென்கின்ற கோரிக்கை எங்கள் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்தது. 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் மாவட்டத்தின் பெரும்பகுதியான சிவகாசி, விருதுநகர், அருப்புக்கோட்டை போன்ற பகுதிகளுக்கு நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய முன்முயற்சியின் காரணமாகவும், எங்கள் மாவட்டத்தின் மாண்புமிகு அமைச்சர்கள் மரியாதைக்குரிய அண்ணன் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அண்ணன் திரு. தங்கம் தென்னரசு அவர்களும் சேர்ந்து, பெருமுயற்சி எடுத்து, எங்கள் மாவட்டத்தில் உள்ள நகரங்களில் உள்ளவர்கள் நல்ல தண்ணீர் குடித்துக்கொண்டிருக்கின்றார்கள். மீதம் உள்ள பகுதிகளுக்கு நல்ல தண்ணீர் வேண்டுமென்ற கோரிக்கை வலுவாக இருந்தது. நாங்கள் எங்களுடைய கட்சியினுடைய மாநிலச் செயலாளர் தோழர் பாண்டியன் அவர்களை வரவழைத்து, போராட்டம் எல்லாம் நடத்தினோம். போராட்டமே தேவையில்லை. கோரிக்கை நிறைவேற்றப்படவேண்டுமென்கிற அடிப்படையில் இன்றைக்கு வத்திராயிருப்பு ஒன்றியப் பகுதிக்கு மட்டுமல்ல, அதனுடன் சேர்ந்த, மாவட்டத்தில் இருக்கின்ற, ஏழு பேரூராட்சிகள், மற்ற பகுதிகளுக்கெல்லாம் தண்ணீரின் தேவை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தி. இராமசாமி, கேள்விக்குள்ளே வாருங்கள்.

திரு. தி. இராமசாமி: எனவே, எங்களுடைய ஒன்றியப் பகுதிக்கு— இப்போது தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை அறிவித்திருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், எங்களுடைய மாவட்ட அமைச்சர்களுக்கும் நாங்கள் நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, இந்தத் திட்டத்தை விரைவாக நிறைவேற்றிக் கொடுக்கவும், இந்தப் பகுதிக்கு எல்லாம் தண்ணீர் வழங்குகின்ற தாமிரபரணி ஆற்றினைப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்க கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

[2010 நவம்பர் 10

முற்பகல் 9-35

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய நன்றிக்கு நான் முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை நிறுவனத்தின்மூலமாக கலந்தாலோசகரால் திட்ட மதிப்பீடு சீராய்வு செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. 'எனவே, அந்தப் பணிகள் விரைவிலே முடிவடைய இருக்கின்றன; எந்தத் தேதியில் இது தொடங்கி வைக்கப்படும்' என்று ஒரு வினாவை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். வருகிற 29 ஆம் தேதி அதற்குரிய அடிக்கல் நாட்டு விழா நடைபெறவிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இந்தப் பணி முடிவடைகிற நேரத்தில், இந்தப் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலமாக, வத்திராயிருப்பு ஒன்றியத்தில் இருக்கக்கூடிய குடிநீர்ப் பற்றாக்குறை மற்றும் எதிர்கால குடிநீர்த் தேவையைப் பூர்த்திச் செய்யக்கூடிய வகையில் தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, முக்கூடல் அருகே நீர் உறிஞ்சிக் கிணறுகள் அமைத்து, விருதுநகர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய செய்தூர், செட்டியார்பட்டி, மம்சாபுரம், வத்திராயிருப்பு, சுந்தரபாண்டியபுரம், வ.புதுப்பட்டி மற்றும் ச.கொடிக்குளம் ஆகிய 7 பேரூராட்சிகள், இராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் வத்திராயிருப்பு ஒன்றியங்களில் இருக்கக்கூடிய 395 குடியிருப்புகளில் இருக்கக்கூடிய 3,84,315 மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்கப்படவிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராமசாமி, நன்றிதான் சொல்லிவிட்டீர்களே? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத்தில் அனைத்து நகரங்களுக்கும் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டம் வழங்கப்பட்டிருக்கின்றது. ஏற்கெனவே ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் முடிவடையும் நிலையில் இருக்கின்றன. மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் நிறைவுற்ற திட்டத்தைத் தொடங்கி வைத்து, தண்ணீரை மக்களுக்கு வழங்கவேண்டும்.

அதேபோல, இராஜபாளையம் நகரம் மட்டும் இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்படாமல் விடுபட்டு இருக்கிறது.

2010 நவம்பர் 10]

அங்கே இருக்கின்ற நகராட்சியில், தனியாக, நாங்கள் மேற்குத் தொடர்ச்சி மலை தண்ணீரைப் பயன்படுத்திக்கொள்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஆனால், அங்கும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்திலே இராஜபாளையம் நகராட்சியை இணைப்பதற்கான முயற்சியை நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று தங்களின்வாயிலாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. மதியரசன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

13—

உழவர் சந்தை

***112783—திரு. சுப. மதியரசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளையான்குடி தொகுதி, சாலைக்கிராமத்தில் உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) இளையான்குடி தொகுதி, சாலைக்கிராமத்தில் உழவர் சந்தை அமைப்பதற்கான வாய்ப்புகள் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. மதியரசன்.*